பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

30 06 2025 **MONDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஐந்து நாள் பயணமாக **Ghana, Trinidad-Tobago, Argentina, Brazil, Namibia** நாடுகளுக்கு நாளை மறுநாள் செல்கிறார்.

- சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த ஐந்தாண்டுகளில் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- நீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்துவதில் திருப்பூர் ஆயத்த ஆடை தொழில்துறையினர் நாட்டிற்கே முன்னோடியாக திகழ்வதாக மத்திய ஜவுளித்துறை இணையமைச்சர் திரு. **Pabitra Margherita** தெரிவித்துள்ளார்.

- அண்டை நாடுகளான சிரியா மற்றும் லெபனான் உடன், நட்புறவை ஏற்படுத்த இஸ்ரேல் விருப்பம் தெரிவித்துள்ளது.

- ராணுவத்தினருக்கான உலக துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் **Omkar Singh** வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஐந்து நாள் பயணமாக **Ghana, Trinidad - Tobago, Angentina, Brazil, Namibia** நாடுகளுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

இதுதொடர்பாக புதுதில்லியில் இன்று செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய வெளியுறவு அமைச்சகத்தின் பொருளாதார விவகாரப் பிரிவு செயலாளர் திரு. **Dammu Ravi,** இந்த ஐந்து நாள் பயணத்தின் முதல்கட்டமாக அடுத்த மாதம் 2 மற்றும் 3ஆம் தேதியில் **Ghana-**வுக்கு பிரதமர் செல்லவிருப்பதாக தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி முதல்முறையாக **Ghana-**வுக்கு பயணம் மேற்கொள்வதாகவும், அந்நாட்டு அதிபருடன் பொருளாதாரம், எரிசக்தி, பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவை வலுப்படுத்தும் விதமாக பேச்சு நடத்தவுள்ளதாகவும் திரு. **Dammu Ravi** கூறினார்.

>>>>>><<<<<<

சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த ஐந்தாண்டுகளில் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 2020-21ஆம் நிதியாண்டில் இந்த வருவாய் 11 புள்ளி மூன்று ஏழு லட்சம் கோடி ரூபாயாக இருந்ததாகவும், கடந்த நிதியாண்டில் இதுவரை இல்லாத அளவிற்கு 22 புள்ளி எட்டு லட்சம் கோடி ரூபாய் வருவாய் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரியின் சராசரி மாத வருவாய் ஒன்று புள்ளி எட்டு நான்கு லட்சம் கோடி ரூபாயாக உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்டு, நாளையுடன் எட்டு ஆண்டுகள் நிறைவடைகிறது

>>>>>><<<<<<

ஆப்பரேசன் சிந்தூர் நடவடிக்கை தீவிரவாதத்தை எந்த சூழலிலும் சகித்துக் கொள்ள முடியாது என்பதை உலகிற்கு உணர்த்தியிருப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், சாதாரண மக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் தீவிரவாத தளங்கள் அழிக்கப்பட்டதாக கூறினார்.

இந்நடவடிக்கை குறித்து அனைத்துக் கட்சி குழுவினர், உலக நாடுகளுக்கு எடுத்துரைத்தது, கட்சி வேறுபாடுகளை கடந்து, நாட்டின் நலனே முக்கியம் என்பதை எடுத்துக்காட்டியதாக அவர் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

நீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்துவதில் திருப்பூர் ஆயத்த ஆடை தொழில்துறையினர் நாட்டிற்கே முன்னோடியாக திகழ்வதாக மத்திய ஜவுளித்துறை இணையமைச்சர் திரு. **Pabitra Margherita** தெரிவித்துள்ளார்.

திருப்பூரில் ஏற்றுமதியாளர்கள் சங்க அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், 2030ஆம் ஆண்டுக்குள் ஜவுளித்துறையில் 100 மில்லியன் அமெரிக்க டாலர் ஏற்றுமதி என்ற பிரதமரின் இலக்கை அடைய திருப்பூர் தொழில்துறையினர் முழுஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

திருப்பூர் தொழில்துறையினர் முன்வைத்துள்ள கோரிக்கைகள், பிரதமர் மற்றும் ஜவுளித்துறை அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டு, உரிய தீர்வுகள் காணப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தார்.

>>>>>><<<<<<<

தெலங்கானா மாநிலம், சங்கரெட்டி மாவட்டத்தில் உள்ள மருந்து நிறுவனம் ஒன்றில் நேரிட்ட வெடிவிபத்தில் 12 பணியாளர்கள் உயிரிழந்தனர். 26க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

விபத்து நேரிட்ட இடத்தில் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் மீட்பு நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தமது இரங்கலை தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், காயமடைந்தவர்கள் விரைவாக குணமடைய தாம் பிரார்த்திப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி, மீட்பு நடவடிக்கைகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று கூறியுள்ளார்.

இதற்கிடையே, காயமடைந்தோருக்கு சிறந்த மருத்துவ உதவிகள் கிடைக்க தகுந்த ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

விபத்து பகுதியை நேரில் பார்வையிட்ட மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. விவேக் வெங்கடசாமி, விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என்று தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<<

ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி நான்கு நாள் பயணமாக இன்று பூட்டான் புறப்பட்டுச் சென்றார்.

இந்தியா – பூட்டான் இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தும் வகையில் அவரது இந்தப் பயணம் அமைந்துள்ளது.

இந்தப் பயணத்தின் போது, பூட்டான் மன்னர் திரு. **Jigme Khesar Namgyel Wangchuck** மற்றும் அந்நாட்டு ராணுவ தலைமை செயல்அதிகாரி லெப்டினென்ட் ஜெனரல் **Batoo Tshering** ஆகியோருடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையே நெடுங்காலமாக தொடரும் ஆழமான நட்புறவை உறுதிப்படுத்தும் வகையில், ஜெனரல் உபேந்திர துவிவேதியின் பயணம் அமைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>><<<<<<**

காஷ்மீர் கைவினைக் கலைஞர்களின் தயாரிப்புகளை உலகம் முழுவதும் சந்தைப்படுத்துவதற்கு தேவையான உதவிகளை ஜம்மு காஷ்மீர் அரசு செய்து தரும் என்று முதலமைச்சர் திரு. ஓமர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீநகரில், கைவினைக் கலைஞர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், தயாரிப்பாளர்களுக்கும் நுகர்வோருக்கும் இடையேயான உறவில் புத்துணர்ச்சியை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டார்.

வடிவமைப்பு, தயாரிப்பு மேம்பாடு மட்டுமல்லாமல், உட்கட்டமைப்பு மற்றும் செயல்முறைகளில் நவீனத்தை புகுத்த கைவினைக் கலைஞர்கள் தயாராக இருக்க வேண்டும் என்று திரு. ஓமர் அப்துல்லா கேட்டுக் கொண்டார்.

**>>>>>><<<<<<**

அண்டை நாடுகளான சிரியா மற்றும் லெபனான் உடன், நட்புறவை ஏற்படுத்த இஸ்ரேல் விருப்பம் தெரிவித்துள்ளது.

ஜெருசலேம் நகரில் இன்று செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் திரு. **Gideon Sa'ar,** இஸ்ரேலின் பாதுகாப்பை முன்நிறுத்தி, அண்டை நாடுகளான சிரியா, லெபனானுடன் அமைதி மற்றும் சுமுகமான உறவை பேண விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் அமைதி ஒப்பந்தங்களில், போரில் இஸ்ரேல் கைப்பற்றிய **Golan** குன்றுகள் அந்நாட்டின் ஒரு பகுதியாக இருக்கும் என்று திரு. **Gideon Sa'ar** கூறியுள்ளார்.

**>>>>>><<<<<<**

ஜார்க்கண்ட், மேற்குவங்கம் மற்றும் சிக்கிம் மாநிலத்தின் இமயமலையை ஒட்டிய பகுதிகள், மத்தியப்பிரதேசம், சத்திஷ்கரின் ஒருசில இடங்களில் அடுத்த 6 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதேபோன்று, ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட், உத்தரப்பிரதேசம், பஞ்சாப் மற்றும் கிழக்கு ராஜஸ்தானின் ஒரு சில இடங்களில் அடுத்த ஆறு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அருணாச்சலப் பிரதேசம், அஸ்ஸாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த 7 நாட்களுக்கு இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கேரளா, மாஹே, லட்சத்தீவு மற்றும் கர்நாடகா மற்றும் ஆந்திராவின் கடலோரப் பகுதிகளின் ஒருசில இடங்களில் அடுத்த 7 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்காலில் ஒரு சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட இரண்டு முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 22 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

ராணுவத்தினருக்கான உலக துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் **Omkar Singh** வெண்கலப்பதக்கம் வென்றார்.

நார்வேயில் நடைபெற்ற இப்போட்டியின், ஆடவர் 25 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>><<<<<<

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற 291 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**Northampton-**ல் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா 49 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 290 ரன் எடுத்தது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரில் முதல் ஆட்டத்தில் வெற்றிபெற்று இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

>>>>>><<<<<<

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ankur Bhattacharjee – Taneesha Kotecha** இணை வெண்கலப்பதக்கம் வென்றது.

**Tashkent** -ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்த இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Divyanshi Bhowmick** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>END<<<<<<